A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 05 / 2023**

திரு A.பாலசுப்பிரமணியம்,
92-A, மேட்டுக்காடு தோட்டம்,
செம்பூத்தாம் பாளையம், பெரியபுலியூர் – அஞ்சல்,
பவானி தாலுக்கா, ஈரோடு – 638 455.

………மேல்முறையீட்டாளர்
(திரு A.பாலசுப்பிரமணியம்)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ&ப/நகரியம்/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

2. உதவி செயற்பொறியாளர்/இ&ப/ மேற்கு /ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

3. உதவி மின்பொறியாளர்/திண்டல்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
D.No B1/355, வித்யா நகர், மேல் திண்டல்,
திண்டல் (PO), ஈரோடு – 638 012.

. . . எதிர்மனுதாரர்கள்
(திருமதி K.சாந்தி, செயற்பொறியாளர்/இ&ப/நகரியம்/ஈரோடு
திரு P. அன்புசெழியன், உதவி செயற்பொறியாளர்/இ&ப/ மேற்கு /ஈரோடு
திரு J. சுரேஷ், உதவி மின்பொறியாளர்/திண்டல்)

**மனு பெறப்பட்ட நாள்: 10-01-2023**

**கேட்புரை நாள்: 12-04-2023**

**ஆணை நாள்: 17-04-2023**

10.01.2023 அன்று பெறப்பட்ட திரு A.பாலசுப்பிரமணியம், 92-A, மேட்டுக்காடு தோட்டம், செம்பூத்தாம் பாளையம், பெரியபுலியூர் – அஞ்சல், பவானி தாலுக்கா, ஈரோடு – 638 455 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 05/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 12.04.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மின் இணைப்பு எண். 006-005-193, 006-005-194, 006-005-195 மற்றும் 006-005-196 ஆகிய மின் இணைப்புகளை துண்டிப்பு செய்யுமாறும், தனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு ரூ.15,000/- வேண்டியும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தனக்கு சொந்தமான நான்கு மின் இணைப்புகளை தற்காலிக மின் துண்டிப்பு செய்யுமாறு உதவி மின்பொறியாளர்/திண்டல் அவர்களிடம் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கண்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் மின் துண்டிப்பு செய்யப்பட்டதாகவும் திருமதி கலைவாணி அவர்களின் ஆட்சேபணை கடிதம் அடிப்படையில் கள ஆய்வு செய்யப்பட்டு அவ்வீட்டில் குடியிருந்து வருவது கண்டறியப்பட்டு அம்மின் இணைப்புகளை மீண்டும் மறு மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, தனக்கு சொந்தமான மின் இணைப்புகளை தற்காலிக மின் துண்டிப்பு செய்யுமாறு மேல்முறையீட்டாளர் ஈரோடு மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 22.08.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், ஈரோடு மின்பகிர்மான வட்டம் 01.12.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **<u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 ஈரோடு மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 01.12.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
> *மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் மனுதாரரின் வாதுரைகள் மற்றும் வாரிய தரப்பின் வாதுரைகள், மற்றும் மனுதாரர் அளித்த ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கும் போது 004.006-005-193, 004.006-005-194, 004.006-005-195, 004.006-005-196 மின் இணைப்பு உள்ள வீடானது தற்போது மனுதாரரின் மனைவி மற்றும் மகள் குடியிருந்து வருவதாலும் மின்சாரம் பயன்பாட்டில் இருப்பதாலும் மனுதாரரின் கோரிக்கையான மேற்கண்ட நான்கு மின் இணைப்பையும் தற்காலிக மின் துண்டிப்பு செய்ய இயலாது என இம்மன்றத்தில் இறுதி உத்தரவு வழங்கப்படுகின்றது."*

4.0 **<u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>**:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 12.04.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு A.பாலசுப்பிரமணியம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி K.சாந்தி, செயற்பொறியாளர்/இ&ப/நகரியம்/ஈரோடு, திரு P. அன்புசெழியன், உதவி செயற்பொறியாளர்/இ&ப/ மேற்கு /ஈரோடு மற்றும் திரு J. சுரேஷ், உதவி மின்பொறியாளர்/திண்டல், ஈரோடு மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் தனது சொந்த வீடான எண். 82 மேல்திண்டல் ஈரோடு-12ல் உள்ள மூன்று போர்ஷன்கள் (82, 82/1, 82/2) உள்ள தனது குடும்ப உபயோகம் போக மீதம் உள்ள இரண்டு போர்ஷன்கள் வாடகைக்கு உபயோகிக்கப்பட்ட சொத்தின் மின் இணைப்பு எண்கள் S.C. 004-006-005-193, 194, 195, 196 கொண்ட வீட்டை புணரமைப்பு மற்றும் பழுதுகள் நீக்கும் கட்டிட வேலைக்காகவும், கட்டிட தொழிலாளர்களுக்கு எவ்வித மின் விபத்தும் ஏற்படாமல் தடுக்கவும், கட்டிட பணிக்கு வீட்டு மின் இணைப்புகளை பயன்படுத்துவதை தவிர்க்கவும் தற்காலிக மின் இணைப்பு துண்டிப்பு வேண்டி 12.08.22 அன்று மனு கொடுத்து அன்றே தனது மனுவின் மீது நடவடிக்கை எடுத்து 12.08.2022 அன்று உதவி மின்பொறியாளர், திண்டல் ஈரோடு மின் அலுவலர்கள் தனது வீட்டிற்கு வந்து அன்று வரை பயன்படுத்திய மின் கட்டணங்களை கணக்கிட்டும் மற்றும் ஒவ்வொரு மின் இணைப்பின் தற்காலிக மின் இணைப்பு துண்டிப்பு கட்டணமாக ரூ.1357/- வீதம் 04 இணைப்புக்கும் சேர்த்து, மொத்தம் ரூ.5428/- வசூல் செய்து கொண்டு அதற்கு பின் மேற்படி இணைப்புகள் மின் துண்டிப்பு செய்யபட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 ஆனால் மேல்முறையீட்டாளர், தனக்கு தெரிவிக்காமல் மறு மின் இணைப்புகள் கொடுக்கபட்டுள்ளதாகவும், அதன் மீது குறையுற்று 16.08.2022 அன்று ஈரோடு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் முறையீடு செய்ததாகவும், மேற்படி

குறைதீர் மன்றம் தனது அதிகாரிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு தனது குறையை தீர்த்து நீதி வழங்கவில்லை எனவும் அதனால் இந்த மேல்முறையீடு செய்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேல்திண்டல், ஈரோடு–12 வீட்டு சொத்தின் உரிமையாளரும், துண்டிப்பு செய்யப்பட்ட இணைப்புகள் மனுதாரரான தனது பெயரில் உள்ள நிலையில், மின்வாரிய அலுவலகத்தில் மனுதாரரின் முழு தொடர்பு முகவரி, தனது கைபேசி எண் உட்பட அனைத்து விபரங்களும் விண்ணப்பம் உள்ள நிலையில், மனுதாரர் ஆகிய தனக்கு தெரியாமல், தனக்கு எந்த அறிவிப்பும் செய்யாமல் தனது அனுமதி பெறாமல், மின்வாரியத்திற்கு தொடர்பில்லாத மூன்றாம் நபரான தனது மனைவி கலைவாணிக்கு ஆதரவாக செயல்பட்டு தனது பெயரில் உள்ள துண்டிக்கபட்ட மின் இணைப்புகளை தனது பெயரிலேயே தனக்கு தெரியாமல், ஈரோடு, திண்டல் உதவி செயற்பொறியாளர் மறு மின் இணைப்பு செய்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 ஈரோடு, திண்டல் மின்வாரிய உதவி செயற்பொறியாளர் அவரது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, வீட்டு சொத்தின் உரிமையாளராகவும் மின்வாரியத்தின் நேரடி மின் நுகர்வோராகிய தனக்கு தனது வீட்டின் கட்டிட புணரமைப்பு வேலைகளை துவங்க முடியாமல், தனக்கு மன உளைச்சல், பண விரையம், காலவிரையம். போன்றவைகளை ஏற்படுத்தியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 12.08.2022 அன்று மின் இணைப்புகள் துண்டிப்பு செய்யப்பட்ட பின்னர் தனக்கு தெரிவிக்காமல் தனது அனுமதி பெறாமல் மற்றும் எவ்வித மறு இணைப்பு கட்டணங்களும் இன்றி மறுமின் இணைப்புகள் செய்யப்பட்டுள்ளது பற்றி 16.08.2022 அன்று பதிவு அஞ்சல் மூலம் ஈரோடு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் உடனடியாக மின் இணைப்புகளை துண்டிக்கும்படி உரிய ஆதாரங்களுடன் புகார் மனுவை பதிவு செய்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 ஆனால் மேற்படி மன்றம் சுமார் இரண்டு மாதங்களுக்கு பின் 14.10.2022 அன்று விசாரணைக்கு எடுத்து கொண்டு, நீதியை புறந்தள்ளி, ஒருதலை பட்சமாக செயல்பட்டு 01.12.2022 அன்று மின்வாரிய அதிகாரிகளால் மறு மின் இணைப்பு

கொடுக்கப்பட்டது சரியானது என்று தீர்ப்பளித்துள்ளதாகவும், மேலும் 01.12.2022 அன்று வழங்கபட்ட தீர்ப்பின் நகலை 09th Dec 2022 அன்று அனுப்பப்பட்டதாக பதிவு செய்து கொண்டு 16.12.2022 அன்று பதிவு தபால் மூலம் அனுப்பி தனக்கு 17.12.2022 அன்று டெலிவரி செய்யபட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 14.10.2022 அன்று ஈரோடு மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் சமர்பிக்கப்பட்ட தனது மனுவின் பாரா 1, 2, 3, 4, 5, 6 ஆகியவற்றில் பதிவு செய்துள்ள தனது தரப்பு வாதங்களையும் அதன் உண்மைகளையும் ஆராய்ந்து பார்க்காமல், நடுநிலை தவறி, மின்வாரிய செயற்பொறியாளர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு தீர்ப்பு வழங்கியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 வழக்கறிஞர்களை உறுப்பினராக கொண்டு நீதிமன்றமாக செயல்பட்ட ஈரோடு மின்நுகர்வோர் குறைதீர்மன்றம், தன்னிடம் எதிர்மனுதாரர்களின் மறு மின் இணைப்புகள் தொடர்பாக எந்த ஆவணத்தையும் தனக்கு தரவோ அல்லது காண்பிக்கவோ செய்யவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக எதிர்மனுதாரர்களின் தரப்பு ஆவணங்களை பார்ப்பதற்கான தனது கோரிக்கையும் நிராகரிப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்,

5.9 குறைதீர்மன்றம் தனது மனுவில் கட்டிட பணிக்காகவும், மின்விபத்துகள் ஏதும் நடந்துவிடாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை செயலாகவும் தான் தற்காலிக மின்இணைப்புகள் துண்டிப்பு கோரப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொள்ளவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 தனது வீட்டு சொத்திற்கு வந்து மின் இணைப்புகள் எண்கள்.S.C.004.006-005-193, 194, 195, 196 மீது தற்காலிக மின் இணைப்புகள் துண்டிப்பிற்கான ஆய்வுகளை மேற்கொண்டு உரிய கட்டணங்களை கணக்கிட்டு வசூலித்து கொண்டு, அதன் பின்னர் மின் இணைப்புகளை துண்டிப்பு செய்து, மின் துண்டிப்பு செயல்கள் முறையாக விதிகளின் படி நிறைவேற்றபட்டதாகவும், ஆனால் முறையான வழிமுறைகளை கையாளாமல் மறு மின் இணைப்புகள் விதிகளுக்கு முரண்பாடாக செய்யப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 ஆனால் ஈரோடு மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் மின்வாரிய அதிகாரிக்கு ஆதரவாக செயல்பட்டு, மறு மின் இணைப்பு தர உரிய வழிமுறைகளான, சொத்தின் உரிமையாளரின் போன், 12.08.2022 கொடுக்கபட்ட தற்காலிக மின் இணைப்பு துண்டிப்பு மனுவில் தொடர்பு முகவரி போன்றவைகள் திண்டல் மின்வாரிய அலுவலகத்தின் இருந்தும், மனுதாரரிடம் உரிய அனுமதி பெறாமல், அவருக்கும் தெரியாமல், அவரது பெயரிலேயே மறு மின் இணைப்புகள் கொடுக்கபட்டுள்ள நடவடிக்கையை ஆதரித்து செயல்பட்டும், மேலும் An intending consumer who is not the owner of the premises shall produce a consent letter from the owner of the Premises in Form-5, of Annexure – III, or indemnity Bond in Form 6 of Annexure – III, to pay Security deposit twice the normal rate, போன்ற விதிகளை பின்பற்றாமல் மற்றும் மறுமின் இணைப்பு கட்டணங்கள் எதுவுமின்றி, மின் அதிகாரி விதிமுறைகளை மீறி செயல்பட்டு, மறு மின் இணைப்பு சேவை கட்டணங்களையும் பெறாமல், மறு மின் இணைப்புகளை இலவசமாக வழங்கி மின்வாரியத்திற்கு வருமான இழப்பையும், ஏற்படுத்தியுள்ளதையும் கவனத்தில் கொள்ளாமல், மறுமின் இணைப்புகள் செய்யபட்டதற்கு ஆதரவாகவும், மனுதாரருக்கும் குறைதீர்க்காமல் ஈரோடு மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் செயல்பட்டுள்ளதாக என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

> *"TNEB is a not a Charitable Trust to do any Free Service to the Consumers" Every Service is based on its payment only. But in this case the service of re-connection is done without collecting any fees and formalities to do a favor to a third person there by causing damage to the interest of the Petitioner who is actual Consumer to the TNEB."*

5.12 ஈரோடு குறைதீர் மன்றம் தனது உத்தரவில் பக்கம் எண்.6, பாரா 9ல் குறிப்பிட்டுள்ள வீட்டில் மகள்களுடன் குடியிருந்து வருவதாகவும் மகள் (Work from Home) வீட்டிலிருந்தே வேலை செய்து வருவதால். மறுமின்னிணைப்புகள் 12.08.2022 அன்று செய்யபட்டது' என்று குறிப்பிட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். தனது மகள்கள் திருமணமாகி அவரவர் கணவருடன் மூத்த மகள் கனடா நாட்டிலும், இளைய மகள் சென்னையிலும் வசித்து வருகின்றனர் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இதை 14.10.2022 அன்று தனது விசாரணையில் தான் தெரிவித்தும், எழுத்து மூலம் பதிவு செய்தும் உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். ஆனால் தனது தரப்பு நியாயத்தை குறைதீர்

மன்றம் கருத்தில் கொள்ளாமல் தனது உத்தரவில் பாரா 7ல் கடைசி இரண்டு வரிகளில் மனுதாரர் திரு.பாலசுப்பிரமணியம் தனது மனைவியும் மகள்களும் அவ்வீட்டில் இருப்பதாக ஒப்புக்கொண்டார்" என்று குறிப்பிட்டுள்ளது ஆட்சேபனைக்குரியது என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 மேலும் மேல்முறையீட்டாளர் தனது மனைவியின் பிரச்சினைகளையும் அவரின் வாழ்விட வசதிகளை செய்து தர கணவனாகிய தான் இருக்கும்போது மின்வாரிய அதிகாரிகள் தனது மனைவிக்கு ஆதரவாக "Lawful Occupier" மகள்களுடன் குடியிருந்து வருகிறார் என்று தெரிவித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். குடும்பவன்முறை வழக்கு 39/2019 நிலுவையில் உள்ளது என பொய்யான வாதங்களை முன்வைத்துள்ளது மறுமின் இணைப்பு புகார் வழக்கிற்கு அவசியமற்றது என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேலும் தனது மனைவி முழுவதும் நம்பத்தகாதவர் "WHOLLY UNRELIABLE" என்று குறிப்பிட்டு நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பின் நகலையும் குறைதீர்மன்றத்தில் பதிவு செய்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார், தனது புகாரின் அடிப்படையே 'தனக்கு அறிவிக்காமல் தனது அனுமதி பெறாமல் தனது சொத்தில் துண்டிப்பு செய்யபட்ட மின் இணைப்புகளை எப்படி மறு மின் இணைப்பு செய்தீர்கள்? என்பதும், உடனே. குறையை நிவர்த்தி செய்யுங்கள் என்பதும் தான் ஆனால் குறைதீர் மன்றம் தனது குறையை தீர்க்க முன்வரவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.14 மேலும் பக்கம் எண்.7, பாரா.12ல் குறிப்பிட்டுள்ள ஆணைய விதி எண். Supply Code 6(2)"Temporary dismantling and re–erection or shifting service connection within the same premises necessitated due to remodeling of premises will be carried out on payment of required charges for the same" என்று பதிவு செய்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். ஆனால் தனது முறையீடு உரிய கட்டணங்களை தன்னிடம் வசூலித்துகொண்டு, மின் இணைப்புகள் துண்டிப்பு செய்யபட்டுவிட்ட பின்னர், தன்னிடம் அனுமதி பெறாமல், மறு மின் இணைப்பு கட்டணங்கள் இல்லாமல், இலவசமாக மூன்றாம் நபருக்கு (திருமதி கலைவாணிக்கு) ஆதரவாக தனது பெயரில் உள்ள துண்டிப்பு செய்யபட்ட அதே மின் இணைப்புகளை எப்படி மறுமின் இணைப்பு

செய்யலாம்? இதனால் தனக்கு ஏற்பட்ட பண இழப்பு, கால இழப்பு, மன உளைச்சலுக்கு என்ன நிவாரணம் என்பது பற்றி குறைதீர்மன்றம் கவனத்தில் எடுக்கவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இதனால் தனக்கு உரிய நீதி ஈரோடு மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் மறுக்கபட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.15 தனக்கு தனது சொத்தில் மறு மின் இணைப்புகளை தனது அனுமதியின்றி, தனக்கு தெரிவிக்காமல் கொடுத்து மிகுந்த மன உளைச்சலையும், பணம், காலம் விரையம் ஆன காரணத்தாலும், ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம்) நஷ்ட பரிகாரம் ஈரோடு மின்பகிர்மான வட்டத்திலிருந்து தனக்கு செலுத்தும்படி உத்தரவிட வேண்டியும், மேற்படி தன்னிடம் ஏற்கனவே மின்வாரிய அதிகாரிகள் 12.08.2022 அன்று தற்காலிக மின் இணைப்புகள் 04-ன் துண்டிப்பிற்குரிய கட்டணங்களை ரூ.5428 /- வசூலித்துகொண்டுள்ள நிலையில் S.C.004.006-005-004.006-005-193, 004.006-005-194, 004.006-005-195, 004.006-005-196 நான்கு (04) மின் இணைப்புளையும் தற்காலிக மின் துண்டிப்பு செய்ய வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 கடந்த 12.08.2022 அன்று திரு A.பாலசுப்பிரமணியம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் மின் இணைப்பு எண்கள் 006-005-193, 194, 195 மற்றும் 196 ஆகிய மின் இணைப்புகளை தற்காலிக மின் துண்டிப்பு செய்யப்பட்டதாகவும், மேலும் திருமதி.S.கவைவாணி w/o. திரு A.பாலசுப்பிரமணியம், மேல்முறையீட்டளார் அவர்களின் ஆட்சேபணை கடிதம் அடிப்படையில் கள ஆய்வு செய்யப்பட்டு அவர்கள் வீட்டில் குடியிருந்து வருவது கண்டறியப்பட்டு அம்மின் இணைப்புகள் மீண்டும் மறு மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், மேலும் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய பகிர்மான விதிகளின் DC27(4) -ன் படி திரு.Aபாலசுப்பிரமணியம் அவர்களின் மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் அவரது கோரிக்கையில் மின் துண்டிப்பு செய்ய இயலாது என நடுநிலையோடு மின்

நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் இறுதி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 திரு.A.பாலசுப்பிரமணியம் அவர்கள் அளித்த தற்காலிக மின் துண்டிப்பு வேண்டி பெறப்பட்ட விண்ணப்பத்தின் படி ஆய்வு செய்யப்பட்ட போது இவ்வீடு புணரமைக்கும் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என கண்டறியப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 திரு.A.பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு சொந்தமான மின் இணைப்பு எண்கள்: 006–005–193, 194, 195 மற்றும் 196 உள்ள குடியிருப்பு வீட்டில் பழுது பார்ப்பு மற்றும் வீடு புணரமைப்பு செய்ய உள்ளதால் தற்காலிக மின் துண்டிப்பு வேண்டி கடிதம் அளித்துள்ளதாகவும், மேலும் தற்காலிக மின் துண்டிப்பு வேண்டி விண்ணப்பம் திரு.A.பாலசுப்பிரமணியம் அவர்களிடமிருந்து பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டு, அதற்குரிய கட்டணமும் அவரிமிருந்து பெறப்பட்டு, அம்மின் இணைப்புகள் மின் துண்டிப்பும் செய்யப்பட்டதாகவும், தற்காலிக மின் துண்டிப்பு விண்ணப்பத்தின் மூலம் மின் அளவி ஏதும் கழற்றப்படவில்லை எனவும், மேலும் தற்காலிக மின் துண்டிப்பு விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டபோதே மறு மின் இணைப்பிற்கான கட்டணமும் வசூல் செய்யப்பட்ட காரணத்தினால் மறு மின் இணைப்பு வழங்குவதற்கு எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படவில்லை எனவும், மேலும் கடந்த 12.08.2022 அன்று பெறப்பட்ட விண்ணப்பத்தில் விண்ணப்பத்தாரரான திரு.A. பாலசுப்பிரமணியம் அவர்கள் அளித்த தொலைபேசி எண் தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், ஆகையால் மறு மின் இணைப்பு வழங்கும் சமயம் அவருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்க இயலவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 திருமதி.கலைவாணி, w/o. திரு A.பாலசுப்பிரமணியம், மேல்முறையீட்டாளர் அவர்கள் தனது புகாரில் மேற்கண்ட மின் இணைப்புகளில் அவரும் அவரது மகளும் அந்த மின் இணைப்பு கொண்ட வீட்டிலிருந்து பணி செய்து வருகிறார் என்பதினால் மறு மின் இணைப்பு வழங்க கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், ஆய்வில் புகாரில் தெரிவித்தப்படி அவ்வீடுகளில்

குடியிருந்து வருவது கண்டறியப்பட்டு மேற்படி மின் இணைப்புகளுக்கு மறு மின் இணைப்பு 12.08.2022 அன்று வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மனுதாரர் தனது மின் துண்டிப்பு செய்ய கோரிய விண்ணப்பத்தில் கைபேசி எண் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மனுதாரருக்கு தெரிவிக்க இயலவில்லை எனவும், மேற்கண்ட மின் இணைப்பு உள்ள வீடுகளில் குடியிருந்து வருவது தெரியவந்தது எனவும், ஆகையால் குடியிருந்து வரும் வீடுகளில் மின்சாரம் அத்தியாவசியம் என்ற அடிப்படையில் மின் துண்டிப்பு செய்வது ஏற்புடையது அல்ல என்பதால் மின் துண்டிப்பு செய்யப்படவில்லை எனவும், மேலும் இன்றைய தேதி வரை அவ்வீடுகளில் குடியிருந்து வருவதும் மின்சாரம் உபயோகபடுத்தப்பட்டு வருவதும் மாதாந்திர கணக்கீட்டின் மூலம் தெரிய வருகிறதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு.A. பாலசுப்பிரமணியம், எண்.82, மேல் திண்டல், ஈரோடு–12–ல் உள்ள தன்னுடைய சொந்த வீட்டிற்கு புணரமைப்பு மற்றும் பழுதுகள் நீக்கும் கட்டிட வேலைக்காகவும், கட்டிட தொழிலாளர்களுக்கு எவ்வித மின் விபத்தும் ஏற்படாமல் தடுக்கவும், கட்டிட பணிக்கு வீட்டு மின் இணைப்புகளை பயன்படுத்துவதை தவிர்க்கவும் தன்னுடைய வீட்டில் உள்ள மின் இணைப்புகள் SC. No.006–005–193, 006–005–194, 006–005–195, 006–005–196 ஆகியவற்றை தற்காலிக மின் துண்டிப்பு செய்ய வேண்டி 12.08.22 அன்று விண்ணப்பம் கொடுத்ததாக தெரிவித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளருடைய விண்ணப்பத்தை பரிசீலனை செய்த உதவி பொறியாளர்/திண்டல், அன்று வரை அவர் பயன்படுத்திய மின் கட்டணங்களை கணக்கிட்டும் மற்றும் ஒவ்வொரு மின் இணைப்பின் தற்காலிக மின் துண்டிப்பு கட்டணமாக ரூ.1357/– வீதம் நான்கு இணைப்புகளுக்கும் சேர்த்து மொத்தம்

ரூ.5428/- வசூல் செய்ததாகவும், அதன் பிறகு மேற்படி மின் இணைப்புகள் மின் துண்டிப்பு செய்யப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 வீட்டின் உரிமையாளரும் மின் வாரியத்தின் நேரடி மின் நுகர்வோராகிய தனக்கு தெரிவிக்காமல், தனது பெயரில் உள்ள மின் இணைப்புகளை தற்காலிக மின் துண்டிப்பு செய்து விட்டு தனக்கு எந்த அறிவிப்பும் செய்யாமல், தன்னிடம் அனுமதி பெறாமல், துண்டிக்கப்பட்ட மின் இணைப்புகள் மறு இணைப்புக்கான சேவை கட்டணங்கள் எதுவும் இன்றி மூன்றாவது நபருக்கு ஆதரவாக செயல்பட்டு மறு மின் இணைப்பு செய்தது பெரும் சேவை குறைபாடாக கருதுவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் கடந்த 12.8.22 அன்று மேல்முறையீட்டாளர் திரு. A. பாலசுப்பிரமணியம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் மின் இணைப்பு எண்கள் 006-005-193, 006-005-194, 006-005-195, 006-005-196 ஆகியவை தற்காலிக மின் துண்டிப்பு செய்யப்பட்டதாகவும், மேலும், அவரது மனைவி திருமதி. S. கலைவாணி அவர்கள் மின் துண்டிப்பு செய்யப்பட்டதை ஆட்சேபித்தும் மீண்டும் மறு மின் இணைப்பு வேண்டியும் கடிதம் அளித்ததன் அடிப்படையில் கள ஆய்வு செய்யப்பட்டு அவர்கள் அந்த வீட்டில் குடியிருந்து வருவது கண்டறியப்பட்டதாகவும், எனவே, மேற்கூறிய மின் இணைப்புகள் மீண்டும் மறு இணைப்பு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

7.6 மேற்கூறிய மின் இணைப்புகளின் தற்காலிக மின் துண்டிப்பு விண்ணப்பத்தின் மூலம் மின் அளவி ஏதும் கழற்றப்படவில்லை எனவும் தற்காலிக மின் துண்டிப்பு விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட போதே மறு மின் இணைப்பிற்கான கட்டணமும் வசூல் செய்யப்பட்ட காரணத்தினால் மறு மின் இணைப்பு வழங்குவதற்கு எவ்வித கட்டணமும் வசூல் செய்யப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேல்முறையீட்டாளர் தனது வாதுரையில் தன் மனைவியிடம் வீட்டை காலி செய்துவிட்டு தன்னுடன் வந்து வசிக்கும்படி பலமுறை தெரிவித்ததாகவும், மின்னஞ்சல் கடிதம் மூலம் புனரமைப்பு பணிக்காக வீடு பூட்டப்படும் என்று தெரிவித்ததாக மன்றத்தில் தெரிவித்துள்ளார். இதன் மூலம்

மேல்முறையீட்டாளருக்கும் அவரது மனைவிக்கும் குடும்பப் பிரச்சினை இருந்து வருவது தெரிய வருகிறது.

7.8 மேல்முறையீட்டாளர் தனது மனைவிக்கு அனுப்பிய கடிதத்தில் வீட்டைக் காலி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே, மேற்படி வீட்டில் மேல்முறையீட்டாளரின் மனைவி குடியிருந்து வருவது அறியப்படுகிறது. மேலும், மின் இணைப்புகளை பயன்படுத்தி வருகிறார் என்பதும் இது நாள் வரை மின் பயன்பாட்டிற்கான கட்டணம் சரிவர செலுத்தி வருகிறார் என்பதும் உறுதி செய்யப்படுகிறது.

7.9 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீட்டை புனரமைப்பதற்காகவும் பழுதுகள் நீக்கும் போது தொழிலாளர்களுக்கு எவ்வித மின்விபத்தும் ஏற்படாமல் தவிர்க்கவும் தற்காலிக மின் துண்டிப்பு வேண்டி அதற்குறிய கட்டணங்களை செலுத்தியுள்ளார். இருப்பினும் அவருடைய மனைவி அந்த வீட்டில் குடியிருந்து வருவதாகவும் மின்சாரம் உபயோகித்து வருவதாகவும் எனவே மின் துண்டிப்பு செய்ய ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

7.10 இது சம்பந்தமாக, ஒருவர் மின்னிணைப்பை உபயோகித்துவரும் நிலையில் ஒரு கட்டிடத்தின் அத்தியாவசியமான மின்சாரத்தை மின் துண்டிப்பு செய்ய போதுமான காரணங்களை ஆராய விரும்புகிறேன்.

**STATUTORY PROVISIONS FOR DISCONNECTION**

| Sl. No. | Provision | Reason |
|---|---|---|
| 1 | Section 56 of Electricity Act 2003<br>Regulation 21 of TNE Supply Code | Non payment of dues |
| **Court Directions** | | |
| 2 | Specific order of disconnection issued by the Court. | |

7.11 இதுசம்பந்தமாக தமிழ்நாடு மின்வழங்கல் விதி 21 (1)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"21. மின்வழங்கல் துண்டிப்பு :*

*சட்டத்தின் 56 ஆவது சட்டப் பிரிவு, மின் கட்டணம் செலுத்தத் தவறிய மின் வழங்கல் துண்டிப்பு பற்றி பின்வருமாறு கூறுகிறது.*

*(1) அவருக்கு மின்சாரம் வழங்கல் அல்லது செலுத்துதல் அல்லது பகிர்தல் அல்லது சுமந்து செல்லல் (wheeling)தொடர்பாக உரிமதாரருக்கோ மின்னாக்கக் குழுமத்துக்கோ, தனியொருவர், மின்சாரக் கட்டணமாகவோ அல்லது அது தொடர்பான மின்சாரக் கட்டணமல்லாத வேறுபிற தொகையாகவோ அமைந்த நிறுவைகளைக் கட்டப் புறக்கணித்தால், உரிமதாரரோ அல்லது மின்னாக்கக் குழுமமோ (generating company) எழுத்து மூலமாகச் சரியான (clear) 15 நாட்களுக்கான எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்து விட்டு, அவருக்குரிய கட்டணத்தை அல்லது வேறு பிற தொகையை, வழக்கு மூலமும் மீட்பதற்குக் குந்தகமேதுமில்லாதபடி, மின்சார வழங்கலைத் துண்டிக்கலாம். மேலும் அந்நோக்கங்கருதி மின்சாரம் வழங்கும் எந்த மின் தொடரையும் துண்டிக்கலாம் அல்லது கழற்றிவிடலாம். மின்சாரத்தை வழங்கிய, செலுத்திய பகிர்ந்த அல்லது சுமந்து சென்ற பணியமைப்புகள் உரிமதாரரின் அல்லது மின்னாக்கக் குழுமத்தின் சொத்தாகையால், மின் கட்டணத்தையோ அது சார்ந்த வேறுபிற கட்டணத்தையோ, உரியவர் மின் வழங்கல் துண்டித்தபிறகு மீளவிணைப்பதற்காகும் செலவினங்களையும் சேர்த்துக் கட்டும்வரை மின்னிணைப்பு துண்டிப்பு தொடரலாம். ஆனால் அதற்கு மேல்நீடிக்கக் கூடாது."*

7.12 மேற்கூறிய விதியின்படி பயன்படுத்திய மின் நுகர்வுக்கான மின் கட்டணம் செலுத்தாத நிலையில் மின் துண்டிப்பு செய்யலாம் என அறியப்படுகிறது. மேலும் நீதிமன்ற உத்தரவுக்கிணங்க மட்டுமே மின் துண்டிப்பு செய்யலாம் என்பதும் தெரிய வருகிறது.

7.13 மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் மின்சாரச் சட்டங்கள் மற்றும் தீர்ப்புகளில் உள்ள விதிகளின் அடிப்படையில் இதே போன்ற முந்தைய சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட குறிப்புகளைக் கருத்தில் கொண்டு கூறப்பட்ட சட்ட விதிகளை பரிசீலித்து, பல்வேறு முடிவுகளை வழங்கியுள்ளது, அவற்றில் சில கீழே கூறப்பட்டுள்ளன.

*“(i) In S.A.Ponnappan —vs- J.A. Bath urujaman and two others in W.A.No.1396 of 2007 dated 15.04.2009 (TNEB case) reported in 2009 (2) TNCJ 411 (Mad), the Division Bench of the Hon'ble High Court has held as follows :-*

*"10. The above provision makes it clear that an intending consumer, who is in lawful occupation, can apply to the Electricity Board, with the consent of the landlord, for supply of electricity. In case if the owner refused to give consent letter or he is not in station, the consumer shall produce a proof that he is in lawful occupation of the premises and also execute an indemnity bond in Form 6 of the Annexure Ill of this Code indemnifying the Electricity Board against any loss on account of disputes arising out of effecting service connection.*

*11. In such view of the matter, when there is a provision as enacted by the State Electricity Regulatory Commission in accordance with Section 86 of the Electricity Act, 2003 (Central Act 36 of 2003), certainly the lawful occupant has a right to have the electricity supply and if he is compelled to lead his life in darkness, it would amount to make him lead an animal life, which is not the purport of the Constitution. Therefore, we are of the view that the said Clause confers such valuable right to the occupant."*

*(ii) When a consumer for many years was directed to produce documents pursuant to a complaint alleging production of fabricated documents to get service connection, the Hon'ble High Court, Madras, in WP No.29586 of 2015 dated 21.09.2015, has held as follows :-*

*"5. It is very unfortunate to note that based on the complaint received from Seviappan which does not disclose any material evidence, the fifth respondent has issued notice to the petitioner to produce the relevant documents. In fact, the fifth respondent should have called upon the complainant to produce the relevant document with regard to his claim in respect of the said property. Assuming for a moment that even if there is a dispute, the respondent has got no jurisdictional power to decide about the issue and if it all, only the Civil Court can decide the issue. Moreover, the electricity service connection is not given recently but it was given about 15 years ago. When that is the position, the issuance of notices by the fifth respondent is unjustified, unwarranted and to be deprecated and it is accordingly, deprecated."*

(iii) In A.Nazeer Ahmed —vs- Assistant Engineer (North Division), TNEB, Vaniyambadi and another in W.P.No.1040 of 2013 dated 03.04.2013, it has been held as follows :-

*"3. Even assuming that an eviction order has been obtained by the second respondent against the petitioner, unless and until, the same is executed and delivery is obtained by the second respondent, the petitioner who is still holding the property is entitled for the electricity service connection. Therefore, in my considered view, merely because the eviction order has been obtained by the second respondent against the petitioner, the electricity service connection which is available shall not be disconnected."*

மேற்கூறிய தீர்ப்புகளில் ஒருவர் வசித்துவரும் நிலையில் அக்குடியிருப்புக்கான மின்னிணைப்பை மின் துண்டிப்பு செய்ய கூடாது என்பது தெரியவருகிறது.

7.14 ஆகவே, தற்காலிக மின்துண்டிப்பு வேண்டி விண்ணப்பித்த கட்டிடத்தில் அவரது மனைவி குடியிருந்துவரும் நிலையில் அக்கட்டிடத்தின் மினசாரத்தை மின் துண்டிப்பு செய்ய வழிவகை இல்லை. எனவே, மேல்முறையீட்டாளர் அவரின் கோரிக்கை சம்பந்தமாக மற்ற சட்டப்பூர்வ நடவடிக்கைகளை நாடுமாறு அறிவுறுத்தப்படுகிறது. எனவே, இந்த சூழலில் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான தற்காலிக மின்துண்டிப்பு செய்ய வாய்ப்பில்லை என்பதால் அவரிடம்

பெறப்பட்ட கட்டணத்தை மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது.

7.15 மேல்முறையீட்டாளரின் அடுத்த கோரிக்கையான மன உளைச்சல் மற்றும் பொருளாதார இழப்பை ஏற்படுத்திய காரணங்களுக்காக ரூபாய் 15,000/- நஷ்ட ஈடாக வழங்கவேண்டும் என கோரியுள்ளார். இது சம்பந்தமாக நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 7(11)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"7. ......................*

*..............................*

*(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

7.16 மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறைஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது. மேலும், ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் வழி இல்லை என்று தெரிகிறது. எனவே, மேல்முறையீட்டாளரின் இழப்பீட்டு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 8.0 <u>முடிவுரை</u>:

8.1 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளர் தற்காலிக மின்துண்டிப்பு கோரும் கட்டிடத்தில் அவரது மனைவி வசித்து வருவதாலும் மின்

பயன்பாட்டிற்கான உரிய கட்டணங்களை செலுத்திவருவதாலும் எந்தவிதமான நீதிமன்ற மின் துண்டிப்பு ஆணை இல்லாததாலும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

8.2 மேல்முறையீட்டாளரிடம் தற்காலிக மின்துண்டிப்பிற்கான வசூலிக்கப்பட்ட கட்டணங்களை திருப்பி வழங்குமாறு எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.3 மேற்கண்ட ஆணையை 30 நாட்களுக்குள் நிறைவேற்றியமைக்கான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் எதிர்மனுதாரர் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

8.4 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 05/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு A.பாலசுப்பிரமணியம், – By RPAD
92–A, மேட்டுக்காடு தோட்டம்,
செம்பூத்தாம் பாளையம், பெரியபுலியூர் – அஞ்சல்,
பவானி தாலுக்கா, ஈரோடு – 638 455.

2. செயற்பொறியாளர்/இ&ப/நகரியம்/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

3. உதவி செயற்பொறியாளர்/இ&ப/ மேற்கு /ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

4. உதவி மின்பொறியாளர்/**திண்டல்,**
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
D.No B1/355, **வித்யா நகர், மேல் திண்டல்,**
**திண்டல்** (PO), **ஈரோடு** – 638 012.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, இ.வி.என். ரோடு, ஈரோடு – 638 009.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.